1992 பிப்ரவரி 5] [பேரவைத் தலைவர்]

முற்பகல் 11–10

எனக்கு நீங்கள் சில விதிகளைக் கொடுத்துதான் அவையை நடத்தச் சொல்லியிருக்கிறீர்கள். அந்த விதிப்படி தான் நான் நடத்த வேண்டியிருக்கிறது. இந்த விதிகளை மீறி நான் அவையை நடத்திக் கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடு) தயவுசெய்து இதிலே வேண்டாம். கவன ஈர்ப்புக்குப் போக லாம். (குறுக்கீடு) மற்ற மற்றப் பிரச்சினைகளை எல்லாம் கேட் கிறீர்கள். அவை பொதுமக்கள் பிரச்சினை, அதற்கு நான் அனுமதி அளிக்கலாம். (குறுக்கீடு) இதை ஒரு அரசியல் பிரச்சினை போலக் கொண்டு போக வேண்டியதில்லை. (குறுக்கீடு) உங் களுக்கு விதியை நான் சொல்லியிருக்கிறேன். விதிகளையும் நீங்கள்தான் எனக்குக் கொடுத்திருக்கிறீர்கள். இந்த விதிகளின் படி அவையை நடத்த வேண்டுமென்றுதான் நீங்கள் சொல்லி யிருக்கிறீர்கள். அதன்படி நான் சில நடவடிக்கைகளை மேற் கொண்டால், நீங்கள் திரும்ப இதிலே பேசுவது என்ன நியா யம்? (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். திரு. ம. சின்னசாமி.

5. கவன ஈர்ப்பு.

திருச்சி மாவட்டம் மாயனூர் தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் பைப் கம்பெனி லே-ஆப் செய்யப்பட்டுள்ளது குறித்து.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருச்சி மாவட்டம், மாயனூர் தமிழ்நாடு ஆஸ்பெஸ் டாஸ் பைப் கம்பெனி லே-ஆப் செய்துள்ளது குறித்து'' பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழி லாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழி லாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இந்தப் பிரச்சினை போகட்டும். இது ஒரு தொழிற்சாலை மூடியிருப்பது பற்றிய பிரச்சினை.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

திருச்சி மாவட்டம் மாயனூரில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப் பரேஷன் நிறுவனத்தை சேர்ந்த தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (பைப்ஸ்) தொழிற்சாலையில் சுமார் 261 தொழிலாளர்க

வேலை செய்து வருகின்றனர். இந்த தொழிற் சாலையின் மொத்த உற்பத்தித் திறன் 36,000 மெட்ரிக் டன் ஆகும். ஆனால் 1991–92-ஆம் ஆண்டு 7,406 மெட்ரிக் டன் உற்பத்தி அளவுக்குதத்தான் ஆர்டர்கள் வந்தன என்பதால் உற்பத்தி செய்யப்பட்ட 6,603 மெட்ரிக் டன் பொருட்கள் விற்பனை ஆகாமல் தேங்கி விட்டதாகவும் இதன் மதிப்பு ரூ. 509.95 லட்சம் எனவும் தெரிய வருகிறது. இந்நிறுவனம் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வருவதாலும் 1990–91-ஆம் ஆண்டு வரை மொத்த நஷ்டம் ரூ. 1,282.02 லட்சம் ஏற்பட்டுள்ளதாலும் 173 தொழிலாளர்களை லே-ஆப் செய்ய அனுமதி கோரி நிர்வாகம் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 25-எம்-ன் கீழ் மதுரை தொழிலாளர் இணை ஆணையருக்கு மனு செய்துள்ளது. இந்த விண்ணப்ப மனு 27–1–1992 அன்று மதுரை தொழிலாளர் இணை ஆணையர் அவர்களால் பெறப்பட்டுள்ளது. தொழிலாளர் இணை ஆணையர் ஒரு நீதிமுறை சார்புடைய அதிகாரி (Quasi Judicial Authority) என்பதால் இந்த விண்ணப்பத்தின்மீது உரிய விசாரணைகள் நடத்தி 60 தினங்களுக்குள் தனது உத்தரவினைப் பிறப்பிப்பார். மதுரை தொழிலாளர் இணை ஆணையர் இப்பிரச்சினை குறித்து சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருவதால் அரசு தற்போது தலையிடுவதற்கில்லை.

தற்போதுள்ள சூழ்நிலையில் தொழிலாளர்களுக்கு வேலை எதுவும் இல்லை. எனினும் தொழிலாளர் எவரும் லே-ஆப் செய்யப்படவில்லை. அவர்கள் முழுச்சம்பளம் பெற்று வருகின்றனர். தொழில்துறை, தமிழ்நாடு குடிநீர் வாரியம் மற்றும் தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷனிடமிருந்து நிதியுதவி பெற்று இந்த நிறுவனத்தை மீண்டும் இயக்கிட நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாயனூர் அஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலை தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷனால் நடத்தப்படுகிற ஒரு தொழிற்சாலை. அங்கே மொத்த உற்பத்தி 36,000 மெட்ரிக் டன் என்று இருந்தாலும் 1991–92-ஆம் ஆண்டில் வெறும் 7,000-த்துச் சில்லரை மெட்ரிக் டன்கள்தான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 5 கோடி ரூபாய்க்குமேலே மதிப்புள்ள பைப்புகள் தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே இந்த நிலைமையில் அந்த ஆலையை மூடுகிற ஒரு அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவரால் வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் பேரவை லாபியில் பத்திரிகையாளர்களைச் சந்திப்பது மரபல்ல என்று நேற்றே நான் ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறேன்.

அதை வெளியேறி இருக்கிற உறுப்பினரும் கவனத்தில் சொள்ள வேண்டும். பத்திரிகையாளர்களும் அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடிதோச்சி மெல்ல எறிக' என்பது தமிழ் மரபு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது நிறைய தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிற பிரச்சினை. நீங்கள் சொல்வது ஒருவர் பிரச்சினை. நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பற்றிய பிரச்சினை இது. திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : ஆகவே நட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிற ஆலையை நட்டம் ஏற்படாமல் நடத்துவதற்காக அதன்மூலம் தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக வேலை அளிப்பதற்காக, அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காக அரசு ஏதேனும் முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையானது தமிழ்நாடு குடிநீர் வாரியம் மற்றும் தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் ஆகியவற்றிடமிருந்து நிதி உதவி பெற்று இந்த நிறுவனத்தினை மீண்டும் இயக்கிட நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்போது தொழிலாளர்கள் முழுச் சம்பளம் பெற்று வருகிறார்கள்.

6. அறிக்கை அளித்தல்.

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எ. ஏகாம்பர ரெட்டி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாவது சட்டமன்றப் பேரவையின் 1991-92 ஆம் ஆண்டுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவராகிய நான் அக்குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.